
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 1 | ஆகஸ்டு 1988 | இதழ் 8

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30 — 11-00—காலை ஆராதனை

,, : ,, 11-00 — 12-00—ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15 — 8-30—மாலை ஆராதனை

செவ்வாய் : மாலை 7-15 — 8-30—ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)

புதன் : மாலை 5.30 — 7-00—சகோதரிகள் ஐக்கியக் கூட்டம் (ஒருவாரம் விட்டு ஒரு வாரம்)

வியாழன் : மாலை 7-15 — 8-30—வேதாகம ஆய்வு

சனி : மாலை 7-00 — 9.00—மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


| | |
|---|---|
| நீங்கள் இன்றே கர்த்தரைச் சந்திக்க நேர்ந்தால் நிலை என்ன? | 1 |
| மூத்த சகோதரன் | 6 |
| நன்றி கொன்ற பிச்சைக்காரன் | 14 |
| அன்பு அதிகாரம் | 16 |
| ஞாயிறு வியாதி (Sunday (Sickness)) | 19 |
| ஏன் முடியவில்லை? | 20 |
| நல்ல தலைவன் | 23 |
| வாசகர்கள் கருத்து | 27 |




# THIRUMARAI AASAAN

Editor:
J. C. CHOATE

Managing Editor:
E. Z. SELVANAYAGAM

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 1 August 1988 Issue 8

**ஆசிரியவுரை**

## நீங்கள் இன்றே கர்த்தரைச் சந்திக்க நேர்ந்தால் உங்கள் நிலை என்ன?

வாழ்க்கை என்றால் என்ன—என்பது பற்றி பலர் சரியாக மதிப்பீடு செய்வதில்லை. அது நாம் நினைப்பதைக் காட்டிலும் பொருள் பொதிந்தது; சிந்தனைக்குரியது. ஆனால் சிலருடைய செயல்முறைகளைப் பார்த்தால் நாளை என்று ஒன்று உண்டு என்பதை அவர்கள் நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை. நாம் சதாகாலமும் வாழ்ந்து கொண்டேயிருப் போம் என்பது வேறு சிலருடைய எண்ணம். பலர் திடீர் திடீர் என்று நம் கண் எதிரிலேயே மரிப்பதைக் காண்கிறோம். இன்னும் பல மரணங்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். ஆனால் அவைகளைப் பற்றி யெல்லாம் சிந்தித்துப் பார்ப்பதேயில்லை. அது அவர்களுக்குத்தானே நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? என்று எண்ணி, கண்டு கொள்ளாமல் வழக்கம் போல நடந்து கொள்ளுகிறோம். நம்முடைய நிலையை சிறிது நேரம் ஒப்பிட்டுப் பார்க்காமல் நம்முடைய காரியங்களைப் பார்த்துக் கொண்டு நம் மன விருப்பத்தின்படி தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக் கிறோம். இது ஞானமான காரியம் அல்ல. நம் வாழ்க்கையைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கத் தூண்டும் வகையில் நான் உங்களை ஒரு கேள்வி கேட்கட்டும். இன்று நீங்கள் கர்த்தரைச் சந்திக்க நேர்ந்தால் உங்கள் நிலை என்ன? அதாவது இன்று நீங்கள் மரித்துப் போக நேரிட்டால் உங்கள் நிலை என்ன? ஆம். இந்தக் கேள்வி உங்களுக்கு மட்டுமல்ல. நான் உள்பட எல்லாருக்கும் பொருந்தும். ஏனெனில்

உலகத்தில் பிறந்த எல்லோருமே ஏதோ ஒரு கால கட்டத்தில் மரித்தே ஆக வேண்டும். ஆகவே இதைப்பற்றி சிறிது சிந்திப்போம்.

தற்காலத்தில் சடுதி மரணத்தைப் பற்றி அதிகமாய்க் கேள்விப் படுகிறோம். இதய நோய், இரத்தக் கொதிப்பு, விபத்து என்று எத்தனை எத்தனையோ விதங்களில் மக்களின் உயிர் பிரிக்கப்படுகிறது. அது நமக்கும் எந்த சமயத்திலும் நேரலாம் அல்லவா? அப்பொழுது நம்முடைய நிலை என்ன? நீங்கள் கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாக இருக்கிறீர்களா? ஒரு வேளை நீங்கள் நான் இவ்வளவு சீக்கிரமாக சாவேன் என்று நினைக்கவேயில்லை. இரட்சிப்பைக் குறித்து பின்னே பார்க்கலாம். இப்பொழுது அதற்கு என்ன அவசரம் என்று சொல்வீர் களா? அப்படியானால் வாழ்க்கையைப் பற்றி நீங்கள் கொண்டிருக்கிற எண்ணம் எவ்வளவு தவறானது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

ஒருவன் இளைஞனோ, முதியவனோ, நல்ல உடல் நலம் உள்ளவரோ வியாதியுள்ளவரோ எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் ஒரு நாள் மரிக்கப் போவது உறுதி. நாம் விரும்புகிறோமோ இல்லையோ நாம் கடவுளை நம்புகிறோமோ இல்லையோ அதைப்பற்றியெல்லாம் பேச்சுக் கிடையாது மரணம் உறுதி. ஆனபடியால் நம்முடைய இவ்வுலக வாழ்க்கையின் பெரும் பகுதியை வரப்போகிற நித்திய வாழ்வு சம்பந்தமான சிந்தனையில் ஈடுபடுத்துவதே அறிவுடையோர் செயல்.

இப்படிச் சொல்லும் போது சிலபேருக்கு மரணத்துக்கு பிறகு மறு வாழ்வு ஒன்று இருக்கிறது என்கிற விஷயத்தில் நம்பிக்கை இல்லை. அப்படிப்பட்டவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள். அவர்கள் சரீர மரணமே மனித வாழ்வின் இறுதி என்ற எண்ணத்தில் எந்த அநியாயத் தைச் செய்தாவது இந்த வாழ்க்கையில் எல்லா சுகத்தையும் அனுபவித்து விடவேண்டும் என்ற துடிப்பில் பல பாவங்களைக் கூசாமல் செய்கிறார்கள். அவர்கள் மிருகங்கள் பறவைகள் நீர் வாழ் ஜந்துக்கள் போன்று தங்களுடைய வாழ்க்கையும் இந்த உலகத்தோடு முடிந்து போகிறது என்று எண்ணுகிறார்கள். இப்படிச் சிந்திக்கிற குறைமதியாளர்களைப் பார்த்து இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை யுள்ளவர்களாக இருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப் படத்தக்கவர்களாயிருப்போம். 1 கொரி 15 : 19 நீங்கள் எப்படிப் பட்ட நம்பிக்கையுள்ளவர்கள்? இம்மை, மறுமை என்பதை விசுவாசிக் கிறீர்களா?

நான் ஒரு இரகசியத்தை உங்களுக்கு சொல்லுகிறேன். பலர் எண்ணிக் கொண்டிருக்கிறபடி நம்முடைய வாழ்க்கை கல்லறையோடு முடிந்து போவதில்லை. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மரணத்துக்குப் பிறகு ஒரு வாழ்க்கை உண்டு என்பதை வேதாகமம் திட்டமாகச் சொல்லுகிறது. எபிரேய நிருபத்தில் 'அன்றியும், ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றபடியே (எபி 9 : 27) கடவுள் ஒருவர்

இருக்கிறார் என்பதையும் அவருடைய குமாரன் தான் இயேசுகிறிஸ்து என்பதையும் ஒருவர் ஏற்றுக் கொள்ளாமல் கூட இருக்கலாம். அதனால் தேவனுடைய வசனங்கள் பொய்யாகி விடாது. அந்தப்படி முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும். நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான். ரோமர் 14:11,12 இவைகளையெல்லாம் நீங்கள் இப்பொழுது நம்பாமல் கூட இருக்கலாம். அது பற்றிப் பரவாயில்லை. தேவன் நடக்கும் என்று சொல்லுகிற காரியங்கள் உரிய காலங்களில் நடக்கும் போது உங்களையும் அறியாமல் உங்கள் முழங்கால்கள் முடங்கும். உங்கள் நாவுகள் அறிக்கையிடும்.

மேலும் கர்த்தர் சொல்லுகிறார்: பொது உயிர்த்தெழுதல் நடக்கும் போது கல்லறையில் உள்ள அனைவரும் எழுந்து வருவர் என்று யோவான் 5 : 24—29ல் உள்ள வசனப்பகுதி கூறுகிறது. என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.

மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுள்ளவராயிருக்கிறது போல குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராகயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார். அவர் மனுஷ குமாரனாயிருக்கிறபடியால் நியாயத் தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்

**மேற்கண்ட வசனப்பகுதியில் சொல்லப்பட்டுள்ளவைகள் என்ன?** சரீரத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் ஆன்மாவில் செத்தவர்களாக இருக்கும் மக்கள், அவருடைய சத்தத்தைக் கேட்டு தேவனிடத்தில் விசுவாசம் வைக்கிறவர்கள் ஆக்கினைத் தீர்ப்படையார்கள். ஏனெனில் அவர்கள் ஆன்மீக மரணத்தைக் கடந்து விட்டார்கள். அதாவது அவருக்குக் கீழ்ப்படிந்த மக்கள் நித்திய நரகத்துக்குத் தப்பி கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் புதுவாழ்வைப் பெற்று நித்திய வாழ்வுக்கான நம்பிக்கையோடு வாழ்கின்றனர். ஆயினும் குறிப்பிட்டுள்ள ஒரு நாள் வரும்

அந்நாளில் நல்வினை தீவினை செய்தவர்களும் நீதிமான்களும், அக்கிரமக்காரர்களும் ஆகிய அனைவரும் தங்கள் கல்லறையிலிருந்து உயிரோடே எழுந்து வருவர். நல்வினை செய்தவர்கள் அல்லது அவருடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுத்துக் கீழ்ப்படிந்தவர்கள் நித்திய ஜீவனுக்கென்றும், தீவினை செய்தவர்கள் அல்லது அவருடைய வார்த்தைக்குச் செவி கொடாதவர்கள் ஆக்கினைத் தீர்ப்பு அடையும்படிக்கும் எழுந்திருப்பார்கள் என்று விளக்கம் கொடுக்கிறார்.

மேலும் மரணத்துக்குப் பிறகும், உயிர்த்தெழுதலுக்குப் பிறகும் நியாயத் தீர்ப்பு ஒன்று உண்டு என்றும் கூறுகிறார். தீயவர்கள் ஆக்கினைத் தீர்ப்பு அடைவதற்கு எழுந்திருப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே, பின் எதற்கு நியாயத் தீர்ப்பு? தீயவர்கள் நியாயத் தீர்ப்பு நாளிலே விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டு நித்திய அழிவுக்கு ஒப்புக்கொடுக்கப்படுவர். கர்த்தர்தாமே நீதியுள்ள நியாயாதிபதி அவர் பாரபட்சமில்லாமல் நியாயம் விசாரிப்பார் அப்போஸ்தலனாகிய பவுல் 'மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயம் தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதன் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்கிறார்' (அப் 17:31) இங்கே சொல்லப்படுகிற நீதியுள்ள நியாயாதிபதி கிறிஸ்துவே. அவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்றும், அவர் மூலமே மனுக்குலத்துக்கு நம்பிக்கை உறுதி செய்யப்பட்டிருக்கிறதென்றும் அவரே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறார். மேலும் 2 கொரி 5:10-ல் 'ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்டும்' என்று கூறுகிறார். இறுதியாக கிறிஸ்து வானவர் நியாயத்திர்ப்பின்போது தீயவர்கள் நல்லவர்கள் நிலைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது தீயவர்கள் நித்திய ஆக்கினைக்கும், நல்லவர்கள் நித்திய ஜீவனுக்கும் அனுப்பப்படுவர் என்று கூறுகிறார். மத் 25:46. அதை ஒருவராலும் ஒருபோதும் மாற்றவே முடியாது.

நண்பனே, சகோதரியே! இன்று நீ மரிக்க நேர்ந்தால் உன்நிலை என்ன? கர்த்தரை சந்திக்க ஆயத்தமா? நீ கர்த்தருக்குக் கீழ்படியாமல் இருந்தால் நீ கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாக இல்லை என்று பொருள். நீ மரிக்கும்போது என்ன நிலையில் இருக்கிறாயோ அதே நிலைதான் நியாயத் தீர்ப்பிலும் நித்தியத்திலும் தொடரும் காலமெல்லாம் நரகத்தில் கழிக்க விரும்புவாயா? அழுகையும் பற்கடிப்பும் நிறைந்த அவ்விடத்தில் சதாகாலங்களிலும் இருப்பது என்பது எவ்வளவு கடினமானது என்று சிந்தித்துப் பார். அது மாத்திரமல்ல பிசாசும் அவனுடைய தூதர்களும் அவனால் ஆட்கொள்ளப்பட்ட அக்கிரமக்காரர்கள் அனைவருமே அங்கே தான் இருப்பார்கள்.

இன்றைக்கு நீ கர்த்தரை சந்திக்க விரும்பினால், அதை இப்பொழுதே செய் என்று உற்சாகப்படுத்துகிறேன். அப்படிச் செய்வாயானால் நீ இன்றோ நாளையோ அல்லது எப்பொழுதோ மரிக்க நேர்ந்தாலும் சரி. அதைப் பற்றிக் கவலையே வேண்டாம். நீ கர்த்தரை மகிழ்ச்சியோடு சந்தித்து, 'உண்மையும் உத்தமமும் உள்ள ஊழியக்காரர்களே! உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருக்கிற நித்திய மகிழ்ச்சிக்குள் பிரவேசியுங்கள்' என்று இயேசுவால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். அது எவ்வளவு மகிழ்ச்சிகரமான வேளையாக இருக்கும் என்று எண்ணிப்பாருங்கள். அப்படிப் புத்திசாலித்தனமாக தீர்மானம் செய்கிறவர்களுக்கு ஒருபோதும் துக்கமே இருக்காது. நீங்கள் புத்திசாலிகளாக இருக்க ஜெபிக்கிறேன்.

இப்பொழுதே நீங்கள் தேவன் மேல் விசுவாசம் வைத்து, உங்கள் பாவத்துக்காக துக்கப்பட்டு, மனம் திரும்பி, இயேசுவே தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, உங்கள் பாவங்கள் போகக் கழுவப்பட திருமுழுக்குப் பெற்றுக் கொள்வதின் மூலம் கர்த்தர் உங்களை அவருடைய சபையில் சேர்த்துக் கொள்வார். பிறகு நீங்கள் கிறிஸ்தவர்கள் என்ற ஆசீர்வாதத்துக்குரிய நிலையை அடைவீர்கள். மாற்கு 16 : 16 அப் 2 ; 47 அப் 11 : 26.

இவைகளை வாசிக்கிற நண்பனே, சகோதரியே! திருவசனத்தைக் கேட்கிறவர்களாக மாத்திரம் இராமல் அதைச் செய்கிறவர்களாயும் இருங்கள். தயவு செய்து எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் செயல்படுங்கள். இதுவே சரியான தருணம். வாய்ப்பை நழுவ விடாதீர்கள். காலம் சமீபித்து விட்டது.

J C. சோட்

## யாகாவாராயினும் நாகாக்க

நாவானது சிறிய அவயவமாய் இருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது. நாவும் நெருப்புத்தான். அது அநீதி நிறைந்த உலகம் நம்முடைய அவயவங்களில் நாவானது முழு சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது.

சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நீர் வாழ் ஜந்துக்கள் ஆகியவைகளின் சுபாவம் மனித பாவத்தினால் அடக்கப்படும். அடக்கப்பட்டதும் உண்டு.

நாவை அடக்கப் ஒரு மனுஷனாலும் கூடாது. அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்றது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம்.

# மூத்த சகோதரன்

கர்த்தராகிய இயேசு பயன்படுத்திய உவமைகளிலேயே மிகச் சிறந்தது என்று சொல்லும் அளவில் அமைந்துள்ளது. கெட்ட குமாரன் உவமை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர் (லூக் 16 : 11–35) ஏனெனில் அதில் பொதிந்து கிடக்கும் கருத்துக்களும், அறிந்து கொள்ளத் தகு உண்மைகளும் ஏராளம்.

முதலாவது இளைய குமாரனுடைய பிடிவாதத்தையும், முரட்டாட்டத்தையும், ஊதாரித்தனமாய்ச் செலவு செய்து உல்லாசமாக வாழலாம் என்ற எண்ணத்தையும் எவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும். பணம் மட்டும் கையில் இருந்தால், வாழ்க்கை களிப்பும், கேளிக்கை நிறைந்ததாகவும், எப்பொழுதும் இன்பமயமாகவும் இருக்கும் என்று எண்ணினான். அவன் மட்டுமல்ல ; பணம் இருந்தால் பத்தும் செய்யலாம் என்ற நினைப்பில் மிதக்கின்ற மக்கள் தொகை எப்பொழுதுமே மெஜாரிட்டிதான்.

இரண்டாவதாக அந்த இளைஞனின் சிந்தனை ஓட்டம் சரி அல்ல ; அவன் விரைவில் தோல்வி கண்டு துன்ப சாகரத்துக்குள் விழப் போகிறான் என்று தீர்க்க தரிசனம் உரைப்பதும் எளிதே. அவன் கற்பனை செய்து கொண்டு திரிந்தபடி நடைமுறை வாழ்க்கை இல்லை என்று கண்டு கொள்ள வெகு நாட்கள் செல்லவில்லை. அவனிடத்தில் இருந்த பணம் தீரத் தீர நண்பர்கள் நழுவினர். வரவேற்புக் குறைந்தது; கடன் கொடுப்பவர்கள் சாக்குப் போக்குச் சொல்ல முற்பட்டனர். தன் உடமைகள் பொருள்கள் ஏன் ஆடைகளைக் கூட விற்று அரை வயிறும், கால் வயிறும் சாப்பிட்டு சில நாட்களை ஓட்டினான். ஒன்றும் முடியாமற் போகவே ஓட்டிக் கொண்டான் பன்றி மேய்க்க.

மூன்றாவதாக அவன் மனம் திருந்தித் தெளிவு பெறக் கூடும் என்பது எவரும் எளிதில் ஊகிக்கக் கூடிய அளவு சுலபமானதே. அவன் தன் தோல்வியை, தவறை உணர்ந்து புத்தி தெளிந்து சிந்திக்கத் தொடங்கியது மனதை நெகிழச் செய்யும் சம்பவம் என்பதில் ஐயமில்லை. அதைவிட தன் தவறைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்ற துணிவும் முனைப்பும் பாராட்டத் தகுந்தது. அப்படிப்பட்ட முடிவு எடுப்பதற்கு எல்லாராலும் முடியாது. ஒருவனுக்கு நேர்மையான உள்ளமும் ஆண்மையும் இருந்தால் மட்டுமே தான் தவறு செய்து விட்டதை உணரும்போது கூச்சப்படாமல் அதை ஒத்துக்கொண்டு சீர் பொருந்த விரும்புவான்.

நான்காவதாக அந்தத் தகப்பனுடைய உள்ளம் உருகின நிலை நம் இதயத்தை உலுக்கத் தவறுவதில்லை. மகன் எங்கு எப்படி அலைகிறானோ, வீணர்கள் கையில் சிக்கி மாண்டுபோனானோ, என்றைக்காவது

திரும்பி வரமாட்டானா என்று ஏக்கத்தின் பெருமூச்சுகளோடு, உடைந்த உள்ளத்தோடு நாள்தோறும் வீதியையே வெறித்துப் பார்த்துக்கொண்டு வருவோர் போவோரை விசாரித்து கவலையுடன் கழித்துக் கொண்டிருந்த நிலை எவரையும் பரிதாபப்பட வைக்கும். அப்படியொரு நாளில்தான் குழி விழுந்த கண்கள்-பரட்டைத் தலை-தீயிலிட்டாலும் வேகாத அளவு அழுக்கேறி கிழிந்து போன ஆடையோடு ஒரு இளைஞன் வருவதைத் தூரத்திலேயே கண்டு அடையாளம் தெரிந்து ஓடிப்போய் அவனைக் கட்டித் தழுவி உச்சி மோந்து முத்தமிட்டு தன் அன்பையும், மன்னிப்பையும் செயலாக்கிக் காட்டுகிறான்—இது பிள்ளைப் பாசத்தின் உச்சக்கட்டம்.

இனி உவமையின் அடுத்த கதா பாத்திரத்துக்கு வருவோம். இவ் வரிய உவமையின் மிகவும் துன்பம் தோய்ந்த பகுதி என்று ஒன்று இருக்குமானால் அந்த மூத்த சகோதரனுடைய போக்கு பற்றியதாகத்தான் இருக்கும். ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் இளையவன் மட்டும்அல்ல. அந்த தனவந்தனுக்கு இருந்த இரண்டு குமாரர்களுமே கெட்ட குமாரர்கள் தான் என்பது விளங்கும். ஒருவன் தூர தேசத்துக்குச் சென்று தன் ஆஸ்தியை அழித்துவிட்டு வீடு திரும்பியவன். இன்னொருவன் வீட்டிலேயே இருந்து கொண்டு திரும்பி வராதவன். இதில் மூத்தவனுடைய நிலைமை மிகவும் துன்பம் தருவதும் மனக் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடியதுமான சம்பவம். அவனுடைய நிலைமைக்குப் பரிந்து பேச ஒருவருமே விரும்புவதில்லை. இளையவனுடைய விஷயத்தைக் கேட்கும்போது இருக்கிற சுவையும் ஏற்படுகின்ற மன நெகிழ்வும் மூத்தவனுடைய விஷயத்தில் உண்டாவதில்லை. மூத்தவனுடைய பண்புகள் மனிதாபிமானமற்றது, விகாரமானது, கொடூரமானது என்பதே மக்களின் ஒட்டு மொத்தமான தீர்ப்பு. அவனையொத்த ஒரு கதாபாத்திரத்தை ஒருவரும் விரும்பி ஏற்றுக்கொள்வதில்லை ஆனால் உண்மையென்னவெனில் நம்மில் பெரும்பான்மையோர் அவனைப் போலத்தான் இருக்கிறோம். ஆனால் அதை ஒத்துக்கொள்ள வெட்கப் படுகிறோம். பலர் தங்களுடைய வாழ்க்கை இளைய குமாரனுடைய வாழ்க்கையைப் போன்றது என்று ஒப்புக்கொள்வதில் பெருமைப்படுகிறார்கள். ஆனால் மூத்த சகோதரனைப் போல் நான் இருக்கிறேன் என்று எவரும் சொல்ல விரும்புவதில்லையே ஏன் ?

சொல்லப் போனால் மக்களுக்கு இன்றைய அவசர அவசியமான பாடம் இந்த மூத்த குமாரனுடைய கதாபாத்திரத்திற்குள் அடைந்து கிடக்கிறது என்று துணிந்து கூறலாம். முதலாவது அந்த மூத்த சகோதரனைப் போன்று நடந்து கொள்வது எல்லாருக்கும் சுலபம். அடுத்தவனிடம் என்ன குறை இருக்கிறது என்று கண்டு கொள்வது மிகமிகச் சுலபமான காரியம். மற்றவர்களுடைய வாழ்க்கையை நாக் கூச்சமில்லாமல் விவரிக்காத மனிதர்கள் வெகு குறைவு. ஒரு மனிதனுடைய தவறுகளை நாலுபேர் முன்னால் விமரிசித்து மட்டம் தட்டிப் பேசுவது சிலருடைய சிறந்த பொழுதுபோக்கு. ஆனால் தவறு செய்

கிறவனை அணுகி அவனுடைய குறைகளைப் பக்குவமாய் எடுத்துக் கூறி மனந் திரும்ப வைப்பதே சான்றோர்க்கு அழகு. குறை கூறுவதற்கு எவ்விதமான முயற்சியோ, இரக்க சுபாவமோ, மன உருக்கமோ, தைரியமோ வேண்டியதில்லை. கசப்பு உணர்வும், எரிச்சலும் பொறுமையும் கூர்மையான நாக்கும் போதும். இப்படிப்பட்ட குணம் படைத்த சகோதர சகோதரிகள் சபையில் ஏராளமான பேர் இருக்கிறோம். அதனால் ஆவிக்குரிய குடும்பமாகிய சபையில் காணப்பட வேண்டிய மனம் விட்டுப் பேசுகிற யதார்த்தமான மனநிலை, ஒருவரையொருவர் பார்க்கும் போது தங்கள் மனதில் உள்ள பாரங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய சகோதர ஐக்கியம் ஆகியவைகள் குறைந்து போய் சந்தேகமும் பயமும் நிலவுகிறது.

ஐயோ! அவர் முன்னால் நாம் எதையாவது பேசினால் வம்பில் போய் முடிந்து விடும். அவர் ஏதாவது தப்பர்த்தம் செய்து கொண்டு கடித்துக் குதறி விடுவார். எதிலாவது குற்றம் கண்டு பிடிப்பார். என்னத்தையாவது கூட்டிக் குறைத்து, வெட்டி, ஒட்டி சிண்டு முடிந்து விடுவார் என்றெல்லாம் பயந்து கொண்டு வாய்மூடி மௌனிகளாகி விடுகின்றனர். இப்படிப்பட்ட மனநிலை உள்ளவர்கள் மற்ற பலவீனமான சகோதர சகோதரிகளின் விசுவாசத்தை மேம்படுத்தி உற்சாக மூட்டுவதற்குப் பதிலாக அவர்களைக் கடித்துக் குதறிக் குத்திக் காயப் படுத்தி விடுகிறார்கள். இவர்கள் கர்த்தருடைய சபையை தாக்கி நாசப் படுத்தும் சாத்தானுக்குத் தெரிந்தோ தெரியாமலோ துணை போகிறவர்கள். இப்படிப்பட்டவர்கள் உண்மையாய்க் கர்த்தருக்குத் தொண்டாற்றும் ஊழியர்களைப் பலவீனப்படுத்தி அவர்களுடைய வீழ்ச்சியில் மகிழ்ச்சி அடைகிறவர்கள். "உள்ளிருந்தே கொல்லும் வியாதி" இனத்தைச் சேர்ந்த இவர்களே வேறெந்த எதிரிகளையும் விட அஞ்சப் படத்தக்கவர்கள். இவர்கள் பலவீனமான சகோதர சகோதரிகளைத் தாங்கி அரவணைத்துக் கொள்வதற்குப் பதிலாக இடித்து நாசம் செய்து பின் வாங்கச் செய்து விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை ஊழியர்களாகவும், சபை முக்கியஸ்தர்களாகவும் கொண்டுள்ள சபைகள் வளர்ச்சி குன்றி முளைத்த குழிக்குள்ளேயே இருப்பதை நாம் காண முடியும். இப்படிப்பட்ட மூத்த சகோதர குணம் படைத்த கும்பல்களால் பலர் கர்த்தருடைய சபையை நாடி வராமல் ஓடி ஒளிந்து கொண்டார்கள் என்கிற உண்மையை தங்கள் சாதுரியத்தினாலும், மாய்மாலத்தினாலும் மறைப்பதில் தற்போது வெற்றி கண்டாலும் நியாயத் தீர்ப்பு நாளில் விசாரணையின்போது தெளிவாகத் தெரிந்துவிடும்.

இந்த மூத்த சகோதரனிடத்தில் நற்பண்புகளே இல்லை என்று கூறி விட முடியாது. அவன் தன் தகப்பனுக்கு உண்மையும் கீழ்ப்படிதலுமுள்ளவனாக இருந்தான். வீட்டில் தரித்திருந்து தகப்பனுக்கு உதவினான். தம்பி ஓடிப்போனதால் ஏற்பட்ட அதிக வேலைப்பளுவை முறுமுறுக்காமல் பொறுப்புடன் கவனித்து வந்தான். அவனுடைய

பொறுப்புணர்ச்சியைப் பற்றியோ, வேலைத்திறன் பற்றியோ அவன் தகப்பனுருக்கு எவ்வித குறைபாடும் இருந்ததில்லை.

எனினும் அவன் தன் சகோதரன் விஷயத்தில் கொண்டிருந்த கசப்பும் வெறுப்பும் அவனுடைய நல்ல மனதை மாசுபடுத்தி விகாரமும், கொடுமையும் நிறைந்ததாக்கி விட்டது. அந்தப் பொல்லாத இயல்புகள் அவனுடைய இதயத்தைத் தாக்கி அவன் தம்பி மீது எரிச்சல் கொள்ளச் செய்தது. அந்த எரிச்சல் அவன் தகப்பனுருடைய மென்மையான இதயத்தை உடையச் செய்தது. அவனுடைய தகப்பனுர் ஓடிப்போன தனது இளைய குமாரனுக்காக வடித்த கண்ணீரை வற்றச் செய்தது. இளைய மகனுக்காக ஏன் அவர் அவ்வளவு கவலைப்படுகிறுர்? அவனுக்கு என்ன நேர்ந்திருந்தாலும் அது அதிகமல்ல, என்பது தான் அவனுடைய வாதம். இளைய குமாரன் மனம் திருந்தியதைப் பற்றியோ அவன் தன் தவறை உணர்ந்தபொழுது வெட்கம் காரணமாக அதை மறைக்க முயன்று இன்னும் அதிக துன்பத்துக்கு ஆளாகமல் தைரியமாகத் திரும்பி வந்ததைப் பற்றியோ சட்டையே செய்துகொள்ள வில்லை. அவனுடைய எண்ணங்களில் நெளிந்து கொண்டிருந்த காரியம் எல்லாம் அவன் வீட்டை விட்டு ஓடிப்போனதால் குடும்பத்துக்கு ஏற்பட்ட கேவலம், அவன் ஏற்படுத்திய நஷ்டம் ஆகியவைகளே அப்படிப்பட்டவனுடைய மூஞ்சியில் விழிக்கக் கூடாது என்ற வைராக்கியமே அவன் உள்ளத்தில் மேலோங்கி நின்றது.

இரண்டாவது கஷ்டப்பட்டுச் சம்பாதித்த சொத்துக்களை நொடிப்பொழுதில் தகாத வழிகளில் செலவு செய்துவிட்டு வந்தவனுக்கு 'சபாஷ்' போட்டு வரவேற்பா? ஊதாரிப்பயல்களை ஊக்குவிக்கலாமா? தகப்பனுர் அவனிடத்தில் அன்பு பாராட்டுவதும் விருந்து வைப்பதும் அமர்க்களப்படுத்துவதும் எந்த நியாயத்தைச் சார்ந்தது? அவன் செய்த அயோக்கியத்தனத்துக்குத் தக்க தண்டனை கொடுத்துப் புத்தி புகட்டாமல் அவனைக் கொஞ்சிக் குலாவினுல் அவன் எப்படித் திருந்துவான்? இதைப் பார்க்கிற மற்ற இளைஞர்கள் தாங்களும் இப்படிச் செய்யலாம் பின்னர். மன்னிப்பு வரவேற்பு பெற்றுக்கொள்ளலாம் என்றல்லவா எண்ணுவார்கள்? என்று இரக்கமற்ற முறையில் சிந்தித்து எரிச்சலடைந்தான். மேலும் காலமெல்லாம் அவருடைய சொல்லைத் தட்டாமல் கீழ்ப்படிந்து நடந்து வந்த தன்னைக் காட்டிலும், வேசியினிடத்திலும் தகாத வாழ்க்கை முறைகளிலும் பணத்தை விரயம் செய்த தம்பிக்கு அதிக மரியாதை கொடுக்கப்படுவதை அவனுல் ஜீரணிக்க முடியவில்லை, வசனம் 28, 29-ஐ வாசித்து அவனுடைய உள்ளக் குமுறல்களை எப்படி வர்ணிக்கிறுன் என்று கவனியுங்கள். அவனுள்ளத்தில் பற்றி யெறிந்த பொறாமைத் தீ தன் தகப்பன் மீது அவன் வைத்திருந்த மதிப்பையும் அன்பையும் பொசுக்கிப் போட்டது.

மூன்றுவது தன்னைப்பற்றி எண்ண வேண்டியதற்கு மிஞ்சி அவன் எண்ணிக்கொண்டான். தான் தகப்பனுடைய கட்டளைகளை மீருத சற்புத்திரன். காலமெல்லாம் தகப்பனுக்குத் தொண்டு செய்கிறவன். ஆகவே தகப்பனுடைய ஆஸ்தியில் பங்கு கொள்ளத் தனக்குப் பூரண உரிமை உண்டு ஆனுல் தனக்குச் சேரவேண்டிய ஆஸ்திகளை யெல்லாம் தகாத முறையில் அழித்துப் போட்ட தம்பிக்கு இந்த வரவேற்புத் தேவைதானு? ஊதாரித்தனத்துக்கும், குடும்பத்தின் நற்பெயருக்கு பங்கம் விளைவித்தவனுக்கும் வெகுமதி கொடுத்து ஊக்குவித்து, உழைப்பையும், கீழ்படிந்து நடந்தவனையும் வெட்கப்படுத்துகிறீர்கள். போதுமே உங்கள் நியாயமும் உபதேசமும் என்று முறுமுறுத்து எதிர்த்துப்பேசி தகப்பனுக்கு துக்கத்தை உண்டாக்கினுன்.

ஒரு வேளை இளையவன் திரும்பி வருவதை தகப்பனுருக்குப்பதிலாக அண்ணன் முதலில் பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். என்ன நடந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். முகத்தில் கடுமையைத் தேக்கிக் கொண்டு கைகளை இறுகக் கட்டிக் கொண்டு பார்வையில் கனல் பறக்க, தன் தம்பி மெல்ல பயந்து கொண்டு அடிமேல் அடி வைத்து அவனிடத்தில் வருவதை முரட்டுத்தனமாய் ரசித்துக் கொண்டு "வாங்க மைனர் வாங்க, எங்கே வந்தீர்?" என்றெல்லாம் கேலியும் கிண்டலும் கலந்த குரலில் ஆணவமாய்ப் பேசி நகைத்திருப்பான், வந்தவனுக்கோ தர்ம சங்கடமான நிலை ஏற்பட்டிருக்கும். ஏண்டா திரும்பி வந்தோம் என்று பலவாருகப் பயந்து கொண்டு தன் தவறுகளை யெல்லாம் சொல்லித் தீர்க்கிறவரை முறைத்துப் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு "ஆம் நீ சொல்லுகிறது நியாயந்தான். நீ என் தம்பி என்று சொல்லிக் கொள்வதற்கு உனக்குத் தகுதி கிடையாது. வேலைக்காரனுக்குக் கூட இலாயக்கு இல்லை என்று இரக்கமற்ற முறையில் அவனை ஏசி அவன் தன்னுடைய குடும்பத்திற்கு ஏற்படுத்தின களங்கத்தையும் நஷ்டத்தையும் பட்டியல் போட்டு கார காரமாய்ப் பேசி அவனைக் வெட்கப்படுத்தியிருப்பான். இருந்தாலும் தொலைந்து போகட்டும். கூடப் பிறந்த தோஷத்துக்காக ஒரு வேலைக்காரனுக இருந்து தொலை அதுவே ஒரு புண்ணியம் என்று எண்ணிக் கொள் என்று தன் வெறுப்பைக் கொட்டியிருப்பான்.

அந்த மூத்த சகோதரனிடத்தில் காணப்பட்ட இக் கொடிய சுபாஷத்துக்கு அடிப்படைக் காரணம் அவனுடைய இரக்கமற்ற, அரக்கத் தனமான அன்பற்ற தன்மை தான். குற்றங்களைப் பொறுத்துக்கொண்டு மன்னிக்க முடியாத தன்மைதான், அவனுடைய சகலவிதமான முரட்டாட்டங்களுக்கும் வேர். அவனுடைய சகோதர பாசமற்ற தன்மை தான் அவனுடைய வாயில் பிறந்த ஒவ்வொரு கடுமையான சொல்லுக்கும் ஊற்றுக்கண். இப்படிப்பட்ட தீய பண்புகள் எவரையும் காயப்படுத்தி மனக் கசப்பு உண்டாக்கும் விஷம் நிறைந்த தன்மையுடையவைகள். அவனுடைய அத் தீய பண்புகள் அவனுடைய தகப்பனுரின் மனதை எவ்வாறு இரத்தம் கசிய வைத்திருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். அவர் இவ்வளவு காலம் தன்னுடைய காணுமற் போன

மகனுக்காகத் துக்கப்பட்டார். அவனுடைய இருப்பிடத்தைப் பற்றி அவனுடைய உடல் நிலையைப் பற்றி-எங்கு படுத்து என்னத்தைச் சாப்பிடுகிறானோ என்ற கவலை அவனை வாட்டியது. தன் ஆயுசு முடிவதற்குள் என்றாவது ஒரு நாள் அவனைப் பார்க்க முடியுமா? என்ற ஏக்கத்தோடே பல நாட்கள் நம்பிக்கையற்ற நிலையில் நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டு வந்தான். திடீரென்று நம்பமுடியாதது நடந்தது. ஆம் ஒரு நாள் அவன் வந்தே விட்டான். அவனுடைய மகிழ்ச்சியை அவனுடைய கனவு நனவானதை வர்ணிப்பதற்கு வார்த்தைகளே கிடையாது. அப்படியொரு மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தவனுக்கு உங்கள் மூத்த மகன் உள்ளே வர மறுக்கிறான் என்று வேலைக்காரன் ஒருவன் வந்து சொன்ன பொழுது எப்படி இருந்திருக்கும்?

மூத்த குமாரனுடைய கோபத்துக்குக் காரணம் காண அவனிடத்திற்கு வந்தபொழுது அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டு எரிச்சலும், கோபமும், வெறுப்பும், பொறாமையும் கலந்த குரலில் உதிர்த்த வார்த்தைகளைக் கேட்ட தகப்பனுடைய மனநிலையை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? ஆயிரம் தேள்கள் ஒருமித்துக் கொட்டிய அதிர்ச்சி அடைந்திருப்பான் அன்றோ! தகப்பனாருடைய சிந்தனை இரண்டு முரண்பட்ட எண்ண அலைகளால் எவ்வாறு தடுமாறித் தத்தளித்திருக்கும் என்று பாருங்கள். ஒரு பக்கம் காணாமற் போன மகன் திரும்பி வந்து விட்டான் என்கிற பெருமகிழ்ச்சி; மறுபக்கம் மூர்க்கமும் பொறாமையும் கொண்டு விழாவில் கலந்து கொள்ள மறுக்கிற பிடிவாத குணமுடைய மூத்த மகனின் போக்கினால் ஏற்பட்ட அதிர்ச்சி.

கெட்ட குமாரன் தன் கெடுமதியால் அவதியுற்றுச் சீர் அழிந்த பின்னர் வீட்டுக்கே திரும்பிப் போய் விடலாம் என்று எண்ணித் திரும்பி வந்து கொண்டிருந்த பொழுது அவன் வீட்டை நெருங்க நெருங்க அவனுக்கு ஒரு இனம் தெரியாத பய உணர்வு பல கேள்விகளை மனதுக்குள் எழுப்பிக் கொண்டிருந்திருக்கலாம். ஒரு வேளை இதற்குள்ளாகத் தகப்பனார் இறந்து போயிருந்தால்...... அல்லது அவருக்கு தன் மீது இருக்கிற கோபம் இன்னும் தீராதிருந்தால்.... அவர் என்னை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டால்.... வீட்டை நெருங்க நெருங்க அவனுக்கு மிகுந்த பயம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. கால்கள் மேலே செல்ல மறுக்கிறது. திரும்பித் தான் போய் விடலாமா? என்று கூட எண்ணியிருப்பான்.

ஆனால் மீண்டும் ஒன்று சேருகிறோம் என்ற நினைப்பு அவன் உள்ளத்தின் பயத்தை மேற் கொண்டது. அவனுடைய கணிப்புப் பொய்க்கவில்லை. அவனுடைய தகப்பனார் தூரத்திலே தன் மகனைக் கண்டதும் ஓடிவந்து கட்டி அணைத்து முத்தம் செய்த பொழுது அவனுடைய உணர்வுகள் எப்படி இருந்திருக்கும்? ஆம். மன்னிப்பில் மனிதனுக்குக் கிடைக்கும் ஆறுதலுக்கு ஒப்புவமையே கிடையாது. அந்த வரவேற்பு அவனுக்கு ஒரு புறம் மகிழ்ச்சியைத் தந்த போதிலும் மற்றொரு புறம் நமக்கு இத்தகைய வரவேற்பு நியாயந்தானா? என்ற வெட்க உணர்வைக் கொடுத்திருக்கலாம். ஆம் பேச நா எழாமல் மௌனமாக வெட்கி, கூனிக் குறுகிப் போயிருந்தான்.

இப்படி அவன் உணர்ச்சிகளோடு போராடிக் கொண்டிருக்கையில் தான் வந்தது சகோதரனுக்குப் பிரியமில்லை என்கிற செய்தி அவனுக்கு எட்டியிருந்தால் அவனுடைய உள்ளம் எவ்வளவாய் பாதிக்கப்பட்டிருக்கும்? தன் தவறு, அவனால் குடும்பத்துக்கு ஏற்பட்ட அவமானம், நஷ்டம் யாவற்றையும் அவனைவிட அதிகமாய் உணரக் கூடியவர்கள் யார் இருக்க முடியும்? ஆனால் அதே நேரத்தில் அண்ணன் தன் வருகையைக் குறித்து எரிச்சலும் வெறுப்பும் அடைந்திருக்கிறான் என்று கேள்விப்பட்டால் அவன் மனது எவ்வளவு துன்பப்பட்டிருக்கும்? நீங்கள் அந்தக் கெட்ட குமாரனாக இருந்து இப்படியொரு சூழ்நிலையில் இருந்தால் நீங்கள் இதைக் கேட்டுக் கொண்டு அங்கே இருந்திருப்பீர்களா? அவனுடைய தகப்பனாரின் அன்பு வெள்ளம் ஒரு புறம். அண்ணனுடைய பொறாமையும் எரிச்சலும் தன்னை ஏற்றுக்கொள்ள விரும்பாத நிலையும் மற்றொருபுறம் தர்ம சங்கடமான நிலை.

இயேசு பொறுப்பின்மை, அலட்சியப் போக்கு, எதிர்த்து நிற்பது பாவ வாழ்க்கை ஆகிய இழி குணங்களை ஊக்குவித்து, பொறுப்புணர்ச்சி, நன்நம்பிக்கை, கடின உழைப்பும் ஆகியவைகளை அலட்சியம் செய்ய வேண்டும் என்று கூறவில்லை. எதிர்த்து நிற்பதை மெச்சி, மாமிசமும் மனதும் விரும்பினதைச் செய்வதை மன்னித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்று கூறவில்லை. அல்லது இளைய குமாரன் செய்த தீச்செயல்கள் மூத்த குமாரன் நடந்து கொண்டதைவிட குறைவான பாவங்கள் என்பதும் அவருடைய வாதம் அல்ல. தேவன் மனந்திரும்புதல், மன்னிப்பும் ஆகிய காரியங்களுக்குக் கொடுக்கிற முக்கியத்துவத்தையே சுட்டிக் காட்டுகிறார்.

இளைய குமாரன் தன் வீட்டை விட்டு ஓடிப்போனதையல்ல அவன் மனம் திரும்பி வீடு வந்த சேர்ந்ததே பாராட்டப்படுகிறது. அதே போன்று மூத்த குமாரன் பொறுப்புணர்ச்சியோடு பெற்றோருக்குக் கீழ்படிந்து நடந்து வந்ததைப் பற்றி குறைசொல்லப்படவில்லை. ஆனால் திரும்பி வந்த சகோதரனை நேசிக்க முடியாமல் கடின உள்ளமுள்ளவர்களாக இருக்கிறானே என்பது தான் கவலைப்பட வேண்டிய அம்சம்.

இளைய குமாரன் அன்பும், மன்னிப்பும் பெற்று குடும்பத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டான். இதனால் மூத்த குமாரனுக்கு எவ்வித நட்டமுமில்லை. இருக்கிறவைகள் எல்லாம் அவனுக்கே சொந்தம் என்பதிலும் மாற்றமில்லை. குடும்பத்துக்கு அவமானத்தைக் கொண்டு வந்தவனைக் கண்டிக்காமல் தகப்பனார் நேசிக்கிறாரே என்ற ஓர் ஆதங்கத்தினால் ஏற்பட்ட எரிச்சல்.

சகோதரர்களே! மூத்த சகோதரனாக இருப்பது சுலபம். ஒருவனுடைய வாழ்க்கையில் தவறு நேர்ந்து விட்டால் அவன் மீண்டும் உருப்படவே மாட்டான் என்று நினைத்து சந்தேகக் கண் கொண்டு

பார்த்துக்கொண்டு மன்னிக்காமலும் மறு வாழ்வுக்கு வாய்ப்புக் கொடுக்காமலும் இருப்பது சரியல்ல. அன்பும் கனிவும் இல்லாமலே கூட சபையை அச்சுறுத்தி வளர்க்கலாம். ஆனால் தான் செய்தது தவறு என்று உணர்ந்து வீடு திரும்பின இளையவனுடைய நிலையை விட அந்த மகிழ்ச்சியில் பங்கு பெற மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்த மூத்தவன் நிலைமையே மோசம் என்கிற உண்மையை உணர வேண்டும். இளைய குமாரனுடைய பாவம் வெளியரங்கமானது. அதை மற்றவர்களாலும் அவனாலும் காணமுடிந்தது. ஆனால் மூத்தவன் பாவமோ அந்தரங்கமானது மக்களாலும், தன்னாலும் பார்க்க முடியாதது. அவன் தான் ஒரு நீதிமான் என்றும் தகப்பனார் செய்தது தவறு என்பதும் அவன் எண்ணம். இளைய குமாரன் ஓடிப்போன பொழுது தகப்பனாரின் இருதயம் எவ்வாறு உடைந்ததோ அதே போன்ற துக்கம் தன் மூத்த மகன் அம் மகிழ்ச்சியான நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாத போதும் ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை அவனுடைய இரக்கமற்ற போக்கினால் மறைந்து போன துக்க நிலை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வரப்பட்டது.

வேதாகமம் கூறுகிறபடி செய்வது எப்போதும் நன்மை பயக்கும். நம்முடைய ஆலோசனையின்படி செய்வதோ சரிப்பட்டு வராது. இயேசுவின் எல்லா போதனைகளின்படி செய்வது சிறந்தது. அவருடைய ஆலோசனைக்கு எதிர்த்து நிற்பது தகாது. நீதிக்கு அடிபணிவது நல்லது அதை அசட்டை செய்வது தவறு என்பதெல்லாம் சரியே. ஆனால் இவைகளைச் செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டு இரக்கத்தையும், அன்பையும், மன்னிக்கும் சுபாவத்தையும் புறக்கணிப்பது கிறிஸ்தவம் அல்ல. தகப்பனாரைப் போலவே அண்ணனும் அவனை மன்னித்து நேசித்திருப்பானானால் எவ்வளவு மகிழ்ச்சியும் உற்சாகமும் இருந்திருக்கும் அதே போன்று சபைகளிலும் மன்னிப்பும் அன்பும் மற்றவர்களுடைய குறைகளைப் பெரிதுபடுத்தாத தன்மையும் நிலவினால் எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கும். சபை குட்டிப் பரலோகம் என்பதை மறவாதீர்.

**டேவிட் சால்ட்வெல்.**

## உபதேசமும் நடைமுறையும்

நீங்களோ ரபீ என்று அழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவாயிருக்கிறார். நீங்கள் எல்லாரும் சகோதரர்களாயிருக்கிறீர்கள் பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள். பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்- நீங்கள் குருக்கள் என்று அழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவாயிருக்கிறார் மத் 23:8-10.

இந்தத் தெளிவான போதனையை மீறி குரு, பிதா என்னும் பட்டங்களைத் தரித்துக் கொண்டிருக்கிறோம், இது முறையா? தயவுசெய்து கிறிஸ்துவின் உபதேசத்தை மீறி நடக்கிறவர்களைத் திருத்துங்கள் அல்லது அவர்களை விட்டு விலகுங்கள். 2 யோ.ா. 9-11

# நன்றி கொன்ற பிச்சைக்காரன்

காட்டுப் பகுதியிலே ஒரு பிரயாணி வெகு தூரம் நடந்து சென்று கொண்டிருந்தார். களைப்புற்றபோது சற்றே இளைப்பாற விரும்பிய அவர் ஒரு மரத்தடி நிழலில் துண்டை விரித்து தலை சாய்த்தார். அவ்வழியாக வந்த ஒரு பிச்சைக்காரன் அப் பிரயாணியின் அருகில் வந்து அவரிடம் உதவி கேட்டான். இரக்கப்பட்ட அந்த பிரயாணியும் அவனுக்கு உதவ விரும்பினார். ஒரு சிறு பையில் அவரிடம் ஏழு ரூபாய்கள் இருந்தன. அதில் ஆறு ரூபாய்களை அந்த பிச்சைக்காரனிடம் கொடுத்து விட்டு தனக்கென ஓரே ஒரு ரூபாயை மட்டும் வைத்துக்கொண்டார் அந்த பிரயாணி. அந்த பிரயாணியின் தயாள குணத்தை நாம் நிச்சயம் பாராட்டுவோம் அல்லவா? இவ்வளவு தாராளமாக யார் உதவுவார் என்று கூட நாம் எண்ணக் கூடும். ஆனால் கதை இங்கு முடியவில்லை.

ஆறு ரூபாய்களையும் பெற்றுக் கொண்ட அந்த பிச்சைக்காரன் தன் வழியே போவது போல போக்கு காட்டி விட்டு, ஒரு மறைவிடத்தில் ஒளிந்திருந்து அந்த பிரயாணி கண் அயரக் காத்திருந்தான். நல்ல நிழல்; சுகமான காற்று; உடலில் களைப்பு எல்லாம் சேர்ந்து பிரயாணியை சிறிது நேரத்தில் அயரத் தூங்க வைத்து விட்டன. பிச்சைக்காரன் மெதுவாகத் திரும்பி வந்தான். பிரயாணியிடம் மீதியிருந்த ஒரு ரூபாயையும் திருடிக்கொண்டு விரைந்து சென்று மறைந்தான். "சீ இப்படியும் ஒரு ஈனப்பிறவியா? ' என்று நீங்கள் கேட்க மாட்டீர்களா? தனக்கு இலவசமாகக் கிடைத்த ஆறு ரூபாய்களுக்காக நன்றி சொல்லுவதை விடுத்து அந்த ஏழாவது ரூபாயையும் கைப்பற்றுவது வரை அந்தப் பிச்சைக்காரனுக்குத் திருப்தி இல்லையே! எவ்வளவு மோசடியான காரியத்தை இவன் செய்துள்ளான் என அவனை நாம் கடிந்து கொள்ள மாட்டோமா? அவன் பேரில் சிறிதளவாவது இரக்கம் வருமா நமக்கு? நிச்சயமாக வராது.

மேலே குறிப்பிட்ட பிச்சைக்காரனின் நன்றி கெட்ட செயலை வன்மையாகக் கண்டிக்கும் நாம், அவன் செயலுக்கு ஒத்த ஒரு காரியத்தை நாமே செய்து வருகிறோமே!

தேவன் நம் பேரில் அளவற்ற இரக்கமும், அன்புடையவருமாய் இருக்கிறார். நமது உலகத் தேவைகளைச் சந்திக்க நமக்கு ஒவ்வொரு வாரத்திலும் அவர் ஆறு முழு நாட்களைத் தந்துள்ளார். நிச்சயமாக இந்த 6 நாட்கள் நமக்குப் போதுமானது தான். அவ்வரைப் பொறுத்தவரை ஒரே ஒரு நாளை மட்டும் தனக்கென ஒதுக்கியுள்ளார். இந்த ஒரு நாளில் நாம் அவரை ஆராதிக்க அவர் விரும்புகிறார். (அப் 20:7) ஆனால் நாம் செய்வதென்ன? அந்த ஒரு நாளையும், அதாவது அவருடைய நாளையும், நாம் திருடிக் கொள்கிறோம்! நண்பர்களைச் சந்திப்பது, பொழுது போக்குவது இன்னும் இது போன்ற நமது

காரியங்களுக்குத் தானே அந்த நாளையும் நாம் பயன்படுத்திக் கொள்ளுகிறோம். பல தடவைகளில், அந்நாளின் ஒரு சிறு பகுதியைக் கூட அவருக்குத் தருவதில்லையே நாம். ஆராதனைக்கும் செல்வதில்லை. நமது தேவன் நம்மை கனிவுடன் கவனித்து வந்த போதிலும், அவருடைய நாளையும் நாம் அபகரித்துக் கொள்வது எத்தகைய மோசமான காரியம்? அநேகமாக நம்மில் பலர் அவ்வாறு தானே நடந்து வருகிறோம்? 6 நாட்களையும் அவரே எடுத்துக்கொண்டு ஒரே ஒரு நாளை மட்டும் நமக்குத் தந்திருந்தால், அவரை குறை கூற ஒரு காரணமாவது நமக்குக் கிடைத்திருக்கும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லையே? இவ்வித கேவலமான நிலையில் நாம் இன்னும் எவ்வளவு காலத்தைத் தள்ளப் போகிறோம்!

நமது தேவன் நமக்கு சகல நன்மைகளையும் அளித்துள்ளார் (யாக்கோபு 1:17). ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாலும், உலகத் தேவைகளாலும் நம்மை ஆசீர்வதிக்கிறார் (எபேசியர் 1:3; மத்தேயு 6). நாம் அவருடைய எல்லா ஆசீர்வாதங்களுக்கும் எவ்விதத் தகுதியும் அற்றவர்களாக இருந்தபோதிலும், அவர் அவற்றை அள்ளித் தந்துள்ளாரே? இவற்றுக்கு ஈடாக நம்மிடம் அவர் கேட்பது தான் என்ன? நாம் சம்பாதிப்பதில் 90 விழுக்காட்டையா? இல்லையே? 50 அல்லது 20 அல்லது 10 விழுக்காட்டைக் கூட அவர் குறிப்பிடவில்லை. 'அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நினைத்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாக கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார்' (1 கொரி 16:2; 2 கொரி 9:7). ஆனால் நாம் என்ன செய்கிறோம்? நாம் நமது பங்கை மட்டுமின்றி தேவனுடைய பங்கையுமல்லவா நமதாக்கிக் கொள்ளுகிறோம். நமது சுக போகங்களுக்காக நமது வருமானம் முழுவதையும் செலவழித்து விட்டு, 'தேவனே உமக்குக் கொடுக்க விரும்பினேன்; ஆனால் எல்லாம் செலவாகிப் போச்சுதே' என்று சால்சாப்பு கூறி அவரை ஏமாற்றுவதோடு, போலித்தனமான மன்னிப்பும் கேட்டுக்கொள்ளுகிறோம். அதுவும் போதாது என்று, மீண்டுமாக 'தொடர்ந்து என்னை ஆசீர்வதியும்' என தேவனிடம் கேட்டு ஆசீர்வாதங்களை ஆவலுடன் எதிர்பார்த்தும் நிற்கிறோம். இது எத்தகைய மோசடிச் செயல்! நன்றி கொன்ற செயல் இல்லையா?

மேலே சொன்ன பிச்சைக்காரன் கதையை நமது வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பாருங்கள். பிச்சைக்காரனின் தவறை நாம் கண்டோம். இப்போது நமது தவறை உணருவோம்; திருந்துவோம். நமக்கு தேவனால் கொடுக்கப் பட்டவைகளுக்காக நன்றியுள்ளவர்களாக இருந்து, தேவனுக்குரியதை தவறாமல் அவருக்குக் கொடுப்போம். அவருடைய பங்கையும், திருடித் தின்ன இனிமேல் ஆசைப்படமாட்டோம் என்ற சபதத்தை ஏற்போம். அவருடைய ஆசீர்வாதங்கள் அள்ளித் தரப்படுவதை அனுபவத்தில் ருசிப்போம்.

தமிழில் :- எஸ். எஸ். ராஜன்

# அன்பு அதிகாரம்

கொரிந்து திருச் சபைக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபத்தின் பதின்மூன்றும் அதிகாரத்தை 'அன்பு அதிகாரம்' என்று அழைப்பது மிகப் பொருத்தம். இங்கு அன்பு என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறதுக்கு மூல மொழியாக கிரேக்கத்தில் 'அகபே' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு அக்கரையும், கரிசனமும் கொண்ட தன்மை என்று பொருள் கொள்ளலாம். அதை சிலர் செயல் படுகிற நல்லெண்ணம் என்று வர்ணிப்பர். சம்மந்தப்பட்டவர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் செயல்படுவது என்று சொன்னாலும் தவறில்லை. இந்த அன்பு நற்செயல் புரிதல் என்பதோடு நின்று விடுவதில்லை. நற்செயல் புரியத் தூண்டும் அக்கரையும், கரிசனையும் உள்ள நல்லெண்ணம் என்று நீளுகிறது.

மேலும் நற்செயல்கள் செய்கிற அனைவருமே அன்பின் காரணமாகத் தான் அப்படிச் செய்கிறார்கள் என்று கூறிவிட முடியாது இதே அதிகாரம் ஒருவன் தன் ஆஸ்திகளையெல்லாம் விற்று ஏழைகளுக்கு அன்னதானம் செய்தாலும், தியாக உணர்வால் தன் சரீரத்தையே சுட்டெரிப்பதற்கு ஒப்புக்கொடுத்தாலும் அதில் அன்பு கலந்திரா-விட்டால் பயன்தராது என்கிறது.

ஆதிச் திருச்சபைகளில் பிரபலமடைந்திருந்த அற்புத அடையாள வரங்களை விட அன்பே அதிமுக்கியம் வாய்ந்தது என்பதை வலியுறுத்து வதற்காகவே கொரிந்தியர் நிருபத்தில் அன்பு என்னும் பொருள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது என்றால் 'மிகையாகாது இப்படியிருக்க முக்கியமான வரங்களை நாடுகள் இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிப்பேன்' என்கிறார் பவுல். 12:31. மேலும் அன்பும் இணைந்திருந்தால் ஒழிய அந்நிய பாஷை வரங்கள், அறிவை உணர்த்தும் வரங்கள் ஆகியவைகள் அனைத்துமே பயனற்றவை என்று சுட்டிக் காட்டுகிறார்.

அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது என்று பவுல் கூறும் போது, தங்களுக்கு ஆவிக்குரிய வரங்கள் இருக்கிறதாக பெருமைப்பட்டுக்கொள்ளுகிற மக்களைப் பார்த்து உங்களுடைய ஆவிக்குரிய வரங்கள் உங்களைப் பொறுமையும், தயவும் உள்ளவர்களாய் மாற்ற முடியவில்லையா? என்று கேட்காமல் கேட்கிறார். அன்புக்குப் பொறுமையில்லை என் கூறும் போது, உங்களுக்கு அபரிதமான ஆவிக்குரிய வரங்கள் இருப்பது நல்லது. ஆனால் இன்னும் பொறுமையுள்ளவர்களாகவும், ஒருவர் மீது ஒருவர் குரோத மனப்பான்மையுள்ளவர்களாய் இருக்கிறீர்களே, அது ஏன்? என்று வினவாமல் வினவுகிறார். அன்பு தன்னைப் புகழாது; இறுமாப்பாயிராது என்று சொல்லும்

போது அவர்களுடைய ஆவிக்குரிய வரங்கள் உங்களைப் பெருமையுள்ளவர்களாகவும், சுய நலமிகளாகவும் இருக்க எப்படி அனுமதிக்கிறது என்று புலம்புகிறார் அல்லவா? அன்பு அயோக்கியமானதைச் செய்யாது என்று சொல்லும்போது ஆவிக்குரிய வரங்களை உடையவர்கள் என்று சொல்லுகிறவர்களுடைய வாழ்க்கையில் காணப்படும் பலவீனங்கள் ஏன் என்று கேட்கிறார் அல்லவா?

தற்பொழிவை நாடாது என்று கூறும்போது ஆவிக்குரிய வரங்கள் உடைய ஒவ்வொரு கொரிந்தியரும் தங்கள் தங்கள் காரியங்களில் கண்ணாயிருக்கிறார்கள் என்று கடிந்து கொள்ளவில்லையா? இவைகளையெல்லாம் சிந்திக்கும் போது அன்பின் வழியை **அதிக மேன்மையான வழி** என்று அழைப்பதின் காரணம் புரிகிறதல்லவா?

அன்பின் வழி **அதிக மேன்மையான வழி** என்பதற்கு இவைகள் மட்டும் காரணம் அல்ல. அழிந்து ஒழிந்து போகிற அற்புத அடையாளங்கள் செய்யக்கூடிய வரங்களைக் காட்டிலும் அன்பு நித்தியமானது என்பதும் கூட காரணம். அதனால் தான் 'அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்க தரிசனங்களானாலும் ஒழிந்துபோம்; அந்நிய பாஷைகளானாலும் ஒய்ந்துபோம். அறிவானாலும் ஒழிந்துபோம் வ. 8 தீர்க்க தரிசனம், அந்நிய பாஷை, அறிவு ஆகியவைகள் அற்புத அடையாளங்கள் என்று வர்ணிக்கப்பட்டுள்ளன. அவைகள் தற்காலிகமானவைகள் அவைகள் ஒழிந்துபோம்; ஒய்ந்து போம்.முதல் நூற்றாண்டில் காணப்பட்ட அந்த அற்புத அடையாள வரங்கள் கூட குறைவுள்ளது என்றே சொல்லப்பட்டிருக்கிறது (வ.9) என்று பவுல் கூறுகிறார். நிறைவானது வரும்போது அக் குறைவு ஒழிந்துபோகும் (வ 10) குறைவாயிருந்தது முழுமையடையவும், பூரணமடையவும் வகை செய்யப்பட்டது. புதிய ஏற்பாடு முழுமையடைந்ததும்; பூர்ணமானதும் ஆன தேவனுடைய உயில் (அ) ஒப்பந்தம். அற்புத வரங்கள் தேவனுடைய பூரண வெளிப்பாடு உறுதிப்படும் வரை இருக்கட்டும் என்ற நோக்கத்துடன் கொடுக்கப்பட்டன மாற்கு 16:20. அப்படிப்பட்ட வெளிப்பாடு பூரணப்பட்டவுடன் அற்புத வரங்கள் தேவை இல்லாத ஒன்றாகிவிட்டது.

அன்பின் வழி **அதிக மேன்மையான வழி** என்பதற்கு இன்னொரு காரணம் கூட உண்டு. அன்பு, சபை பூர்ண வளர்ச்சி அடைந்திருக்கிறதைக் காட்டுகிறது. ஆனால் அற்புத வரங்களோ சபையின் குழந்தைப் பருவத்தைக் காட்டுகிறது. I கொரி 13:11 சொல்லுவதைக் கேளுங்கள் 'நான் குழந்தையாயிருந்த பொழுது குழந்தையைப் போல பேசினேன், குழந்தையைப் போல சிந்தித்தேன், குழந்தையைப் போல யோசித்தேன். நான் புருஷனான போதோ குழந்தைக்கேற்றவற்றை ஒழித்துவிட்டேன்'

ஆவிக்குரிய வரங்களைப் பற்றி அவ்வளவு அக்கறை காட்டிய கொரிந்தியர்களுக்கு அந்த வரங்கள் சபையின் குழந்தைப் பருவத்துக்கு அடையாளமாக இருக்கிறது என்று ஏன் விளங்கவில்லை? சபை வளர வளர, புதிய ஏற்பாடு பூரணம் அடைய அடைய அற்புத வரங்களின் தேவைகள் மங்கி மறைந்து போகும் என்பதை உணரவில்லையா? ஆனால் அன்பின் தேவை ஒருக்காலும் ஒழியாது; ஒழிந்ததுமில்லை, இனி ஒழிந்து போவதும் இல்லை.

பதிமூன்றும் அதிகாரத்தின் முடிவில் அற்புத அடையாள வரங்கள் ஒழிந்து போகும். ஆனால் விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவைகள் நிலைத்து நிற்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நிலைத்து நிற்கிற அந்த மூன்றிலும் அன்பே சிறந்த இடத்தைப் பெறுகிறது. ஆகவே சகோதரனே, சகோதரிகளே! கிறிஸ்தவத்தின் மிகச் சிறந்த அம்சமாகிய அன்பை உதாசீனம் செய்து விட்டு, தேவை யில்லாத விஷயங்களுக்காக அலட்டிக் கொள்ளாதீர்கள். அன்புக்கு உரிய இடத்தைக் கொடுத்து கிறிஸ்தவத்தை உயர்த்திக் காட்டுவோமாக.

பாப் டங்கன்

## கேளுங்கள் கொடுக்கப்படும்;
## ஆனால் சந்தேகப்படக் கூடாது

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாக இருந்தால், யாவர்க்கும் சம்பூர்ணமாய்க் கொடுப்பவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக் கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.

ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக் கடவன்; சந்தேகப் படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.

அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக

இரு மனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான். யாக்கோபு 1:5-8.

# ஞாயிறு வியாதி. Sunday Sickness

அநேகர் கர்த்தருடைய நாளை அசட்டை செய்து விடுகிறார்கள். ஏனெனில் அவர்களிடம் ஒரு மோசமான வியாதி இருக்கிறது. அந்த வியாதியை ஞாயிறு வியாதி என்று அழைக்கலாம். இந்த வியாதி சபை அங்கத்தினர்களை மட்டுமே பாதிக்கும் விசித்திரமான வியாதி. இது திடீரென்று ஞாயிற்றுக்கிழமை தான் வரும். சனிக்கிழமை இரவு இந்த வியாதிக்குரிய அறிகுறி ஒன்றும் தென்படாது. இந்த பிணியாளி நன்றாக தூங்கி காலையில் எழுந்து நன்றாக நடமாடுவார். காலை சிற்றுண்டியை ஒரு வெட்டு வெட்டுவார். பின்பு ஆராதனை சமயம் வரும் போது திடீரென்று இந்த வியாதி வந்து விடும். ஆராதனை முடியும் நேரம் வரை இருக்கும் பிறகு மெல்ல மெல்ல குணமாகி மதியம் நன்றாக சாப்பிடுவார். மாலையில் நல்ல குணமாவார், அரசியல் பேசுவார், பேப்பர் படிப்பார், அரட்டை அடிப்பார். மாலை ஆராதனை நேரம் வரும் போது மீண்டும் இவ்வியாதியால் பாதிக்கப்படுவார். திரும்ப சுகம் இருக்காது. மிகவும் களைத்து போவார், சீக்கிரம் தூங்க செல்வார். திங்கள் காலையில் எழுந்து வேலைக்குச் செல்ல ஆயத்தமாகி விடுவார். வியாதி போன இடம் தெரியாது. உங்களுக்கு இந்த வியாதி உண்டா?

**இந்த வியாதியைப் பற்றி இன்னும் சில குறிப்புகள்:—**

1. இது எப்போதும் சபை அங்கத்தினர்களையே தாக்கும்.
2. ஞாயிறு தவிர மற்ற நாட்களில் இந்த வியாதி காணப்படாது.
3. இந்த வியாதி அவர்களின் தூக்கத்தையோ, சாப்பாட்டையோ பாதிக்காது.
4. இந்த வியாதி அதிக பட்சம் 24 மணி நேரம்வரை தான் இருக்கும்.
5. குடும்பத் தலைவரையே முதலில் தாக்கும்.
6. இந்த வியாதிக்கு வைத்தியர்கள் வரவழைக்கப் படமாட்டார்கள்.
7. இந்த வியாதி வந்து விட்டால் நிச்சயம் நரகத்திற்கு அழைத்துச் செல்லும்.

தொகுத்தவர்: D. சாமுவேல்ராஜ்

# ஏன் முடியவில்லை?

எத்தனையோ அருளுரைகள் ஆற்றினேன், பயனில்லை. எத்தனையோ எத்தனையோ அறிவுரைகள் கூறினேன்; கேட்பாரில்லை. எத்தனையோ முயற்சி; தோல்வி தான் கண்ட பலன். எத்தனையோ நற்பணிகள் செய்தேன், எதுவும் எடுபடவில்லை.

அப்போஸ்தலர் காலத்தில் பனிரெண்டுக்கும் குறைவான எண்ணிக்கையுள்ளவர்கள் ஐம்பது ஆண்டு காலங்களுக்குள் அன்றைக்கு பரவி வியாபித்திருந்த உரோமைப் பேரரசு முழுவதையும் சுவிசேஷத்தால் நிரப்பி விட்டு, இனிப் போவதற்கு இடம் காணோமே என்று அங்கலாய்த்தார்கள். ரோமர் 15:23. அப்பொழுது இன்றைக்கு இருக்கும் நவீன வசதிகளில் பல இல்லை. ஒலிபெருக்கிகளும், வானொலிகளும், தொலைக்காட்சி பெட்டிகளும், பறக்கும் விமானங்களும் கிடையா.

இன்றைக்கு இவ்வளவு வசதிகளையும் கைவசம் வைத்துக் கொண்டு ஆயிரத்தெட்டு அமைப்புகள் சுமார் முன்னூறு ஆண்டுகள் பாடுபட்டு இந்தியாவில் மூன்று விழுக்காடு மக்களைக் கூட கிறிஸ்துவுக்குள் கொண்டுவர முடியவில்லையே.

ஏன் கூடாமற் போயிற்று? முறை தவறா? முயற்சி குறைவா? பக்திக் குறைவா? சத்தியத்தின் வலிமை குறைந்து விட்டதா? பயிற்சி போதாதா? ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் இரண்டு முக்கியமான காரியங்கள் தெளிவாகத் தெரிகின்றன. 1. அர்ப்பணிப்பு உணர்வும், ஐக்கிய உணர்வும் இல்லாத ஊழியர்கள். 2. சத்தியத்தை முறையாகப் பகுத்துப் போதிக்கும் அளவுக்கு வேத அறிவு இல்லாமை.

'நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள். அப்படி ஒருவரால் ஒருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்' கலா 5:15 என்று அன்றே சொல்லி வைத்தார் பவுல். அது இன்று கனகச்சிதமாய் நடந்தேறிக் கொண்டிருக்கிறது. ஒரே ஆவியினால் உந்தப்பட்டவர்கள் இவ்வளவு முரண்பாடாக எப்படிப் பேசமுடிகிறது? என்று மக்கள் வியப்படைகிறார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நாம் அதைப்பற்றிக் கவலைப்பட்டதாகக் காணோம். இந்தக் கட்டுரை அச்சேறி வெளியே வருவதற்குள் ஒரு புதிய அமைப்பு உதயமானால் கூட ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. கிறிஸ்தவர்களே! முதலில் ஒன்றுபடுங்கள்.

இரண்டாவது உங்களைக் கடவுளுக்கு **அர்ப்பணியுங்கள்.** உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடத்தைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள் 1 பேது 1:15. கடவுளுக்கு நம்மை ஒப்படைக்கும் போது மனிதனின் சித்தம் திருத்தப்

படுகிறது. நம்மை பரிசுத்தம் பண்ணுதல் என்னும் போது ஒருவித போலித்தனமான சன்மார்க்க வாழ்க்கை வாழ்வதல்ல. கடவுளே நம்மைத் தமக்கேற்ற கருவியாக மாற்றும்படி நம்மை ஒப்புக்கொடுத்து விடுவதாகும். நம்முடைய தவறுகள் நமக்கே தெரியாது. தாவீது அரசன் நாத்தான் தீர்க்கதரிசி சொன்ன கற்பனைக் கதையில் அநியாயமாய் நடந்து கொண்ட மனிதனைக் கண்டு கோப மடைந்தான். ஆனால் அதே போன்ற தவறொன்றைத் தான் செய்து கொண்டிருந்ததை நாத்தான் தீர்க்கதரிசி சொல்லும் வரையிலும் புரிந்துகொள்ள வில்லை. ஆகவே 'கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். வேதனை உண்டாக்கும் வழி என்னில் உண்டோ எனப் பார்த்து நித்திய வழியில் என்னை நடத்தும்' என்று சொல்லு வோமாக சங் 139:1;24. அப்பொழுது நம்மைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தரை நாம் சந்திப்போம் லேவி 21:23. ஏசாயாவைப் போன்று அனுதினமும் நம்மை ஜெபம் என்னும் பலி பீடத்தில் வைக்கும் போது அவர் தமது தூய்மை என்னும் அக்கினித் தழலால் நம்மை சுத்த-மாக்குவார் ஏசாயா 6:6,7.

அடுத்து நமக்கு போதிய கல்வி அறிவும், வேத அறிவும் இருக்க வேண்டும். மருத்துவம், கல்வி, தொழில், பாட்டு, நடனம் என்று எல்லாவற்றிற்கும் முறையான கல்வியும், பயிற்சியும் இருக்கின்றன. ஆனால் திருமறையைத் தூககிக் கொண்டு கர்த்தருக்கு ஊழியம் செய்கிறேன் என்று புறப்படுகிறவர்கள் பயிற்சி, கல்வித் தகுதி ஆகிய வைகளைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை இது தேவனையும் அவருடைய வார்த்தையையும் அவமதிக்கும் செயலாகும்.

என்ன ஐயா, பெரிய படிப்பு! இயேசுகிறிஸ்து மீன் பிடிக்கிறவர் களையும், ஆயக்காரர்களையும், பாமரர்களையும் தானே ஊழியத்துக்கு எடுத்துக் கொண்டார் என்று எங்கோ முணுமுணுக்கிற சத்தம் காதில் விழுகிறது ஐயா, தயவு செய்து அப் 4:13-ஐ வாசியுங்கள். அவர்கள் படிப்பறியாத பேதைகளாக ஒரு காலத்தில் இருந்தது மெய்தான். ஆனால் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு மூன்று ஆண்டுகள் கொடுத்த கடுமையான பயிற்சியின் காரணமாக மெத்தப் படித்திருக்கிறோம் என்று எண்ணி கர்வம் கொண்டிருந்த அந்தக் கும்பலே வியந்து ஒப்புக்கொள்ளக் கூடிய அளவு தெளிவு பெற்றிருந்தார்கள் என்பதை நாம் மறந்து விடலாமா?

இயேசு அவர்களுக்குச் சகல காரியங்களிலும் பயிற்சி கொடுத் திருந்தார், ஜெபம் பண்ணக் கற்றுக் கொடுத்திருந்தார், பிரசங்கம் பண்ணக் கற்றுக் கொடுத்திருந்தார். யாருக்கு எப்படி பதில் சொல்வது என்று கற்றுக் கொடுத்திருந்தார், வீடு சந்திக்கக் கற்றுக் கொடுத்-திருந்தார், விருந்து வீட்டிற்கோ திருமண வீட்டுக்கோ சென்றால் எங்கே உட்கார வேண்டும் என்று கற்றுக் கொடுத்திருந்தார்.

நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் மத் 11:29. ஆனால் நாமோ அவருடைய உபதேசங்களை விட்டு விட்டும் மனிதனுடைய ஞானத்தால் கறைபடுத்தி திரித்தும், சேர்த்தும், குறைத்தும் போதிக்கிறோம். சுவிசேஷமே இரட்சிப்புக்கு தேவ பெலன் (ரோமர் 1:16). என்ற நிலை மாறி அஞ்ஞானிகள் கூட நம்ப மறுத்து ஏளனம் செய்கிற மூட நம்பிக்கைகளுக்குத் தீனி போட்டு புது மெருகு கொடுத்து இயேசுவின் பெயருக்கு எவ்வளவு கேவலத்தை உண்டுபண்ணுகிறோம்.

இவ்வளவு காரியங்களையும் நம்முடைய மனதும் மாமிசமும் விரும்பினபடி செய்து விட்டு முதலாம் நூற்றாண்டில் அப்போஸ்தலர்களால் பெற்ற வெற்றி நமக்குக் கிட்டவில்லையே என்று புலம்பினால் எப்படி முடியும்? ஆகவே முதலாம் நூற்றாண்டில் போல் அப்போஸ்தலர்களுடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் உறுதியாய்த் தரித்திருப்போம், வெற்றி பெறுவோம்.

**E. Z. செல்வநாயகம்**

## சோதனை வந்தால் சோர்ந்து போகாதே, பிறர் மேல் பழி போடாதே, கடவுளை நிந்தியாதே. நீயே தான் அதற்கு காரணம்.

சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமன் என்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத் தத்தம் செய்த ஜீவ கிரீடத்தை பெறுவான்.

சோதிக்கப் படுகிற எவனும் நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக. தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல; ஒருவரையும் அவர் சோதிக்கிறவருமல்ல.

அவனவன் தன் தன் சுய இச்சையினாலேயே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பம் தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூர்ணமாகும் போது மரணத்தைப் பிறப்பிக்கும் யாக் 1:12-15

### உங்கள் ஞானம் எந்த ரகம்? யாக் 3:13-17

| லௌகிக ஞானம் | பரத்திலிருந்து வருகிற ஞானம் |
|---|---|
| 1. கசப்பான வைராக்கியமுள்ளது. | 1. சுத்தமுள்ளது. |
| 2. விரோத மனப்பான்மை உள்ளது. | 2. சமாதனமுள்ளது. |
| 3. பெருமையுள்ளது. | 3. இணக்கமுள்ளது. |
| 4. பொய் சொல்ல அஞ்சாதது. | 4. இரக்கமுள்ளது. |
| 5. ஜென்ம சுபாவத்துக் கடுத்தது. | 5. நற்கனிகள் நிறைந்தது |
| 6. பேய்த் தனத்துக்கு அடுத்தது. | 6. பட்சமாதகமில்லாதது. |
| | 7. மாயமற்றது. |

# நல்ல தலைவன்

மனித வாழ்க்கையில் மிகவும் விரும்பப்படுவது தலைமைப் பதவி. இந்த விருப்பம் எல்லாத் துறையினருக்கும் பொதுவான ஒன்றாகும். இந்த விருப்பத்தை நமது ஆண்டவர் முறியடிக்கவில்லை. ஆனால் அதனைக் கடினமான ஒன்றாக மாற்றினார். தலைவர்களாக விரும்புகின்றவர்கள் தங்கள் ஆசனங்களின் அழகையும், தங்கள் கையெழுத்துக்களின் பெருமையையும் பற்றி கனவு காணாமல் பணிகளில் தாழ்விடத்தையும் பாடுகளில் முதலிடத்தையும் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று போதித்தார். தலைவன்பற்றிய அன்றைய அரசியல், சமய எண்ணங்களுக்கு இயேசுவின் கருத்து புரட்சிகரமானதாகக் காணப்பட்டது. அவர் சொல்லிமட்டுமா காட்டினார்? இல்லை. அவரே பணிகொள்ளும்படி வராமல் பணிசெய்யவும் பலருக்காகத் தன் உயிரைக் கொடுக்கவும் வந்தார் (மா. 10 45). பாடு, பணிவிடை, தாழ்மை ஆகியவற்றில் தான் அவரில் விளங்கின தெய்வீக ஆற்றலைக் காண முடிகின்றது, இயேசுகிறிஸ்துவை இலட்சியத் தலைவராகக் கொள்ளும் நாம் ஏழு பவளங்கள் உடைய ஒரு மாலையை அணியவேண்டுமென்று திருமறை அறிவுறுத்துகின்றது. அந்த ஏழு பவளங்களும் ஏழு பிரமாணங்களாம்.

**நிதானப் புத்தியுள்ளவர்களாயிருங்கள்:** கடவுள் நமக்குப் பலமும் அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். (2 தீமோ. 1:7). பேதுருவைப்போன்று அவசரத் தீர்ப்பு செய்கின்றவர்கள் தங்கள் பணிகளில் வெற்றியடைய முடியாது. உணர்ச்சிவசம், பரவசம் ஆகியவைகளுக்கு ஒரு நல்ல தலைவன் அடிமையாகமாட்டான். பிரச்சினைகள் வரும்போது இரு பக்கத்தையும் தீர விசாரிக்குமுன் தீர்ப்பு கூறக் கூடாது. விபச்சாரக் குற்றத்தில் பிடிக்கப்பட்ட பெண்ணைக் கல்லெறிய யூதர்கள் முயன்றபோது இயேசுவின் முடிவு உடனடியாகக் கூறப்படவில்லை, அவர் தரையிலே குனிந்து எழுதினார். அவரது அறிவுக் கூர்மை வேகமாகச் செயல்பட்டது. நிதானமாகக் கொடுக்கப்பட்ட பதில் அந்தக் குற்றஞ்சாட்டுகளுக்கு ஒரு சாட்டையடியாயிற்று. எனவே நல்ல தலைவனுக்கு நிதானப் புத்தி மிகவும் முக்கியம்.

**நியாயஞ் செய்யுங்கள்:** 'பட்சபாதமுள்ளவர்கள் பாவஞ் செய்து மீறினவர்களென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவார்கள், (யாக். 2:9). உடை, நகை. பெருமை இவைகளுக்குத்தக்கபடி மனிதர்களை நடத்தக்கூடாது என்று அப்போஸ்தலன் யாக்கோபு ஆலோசனை கூறுகிறார். வறுமையால் பாதிக்கப்படும் குடியானவனும், செல்வாக்குடைய மூப்பரும் ஒரு கிறிஸ்தவப் போதகரின் பார்வையில் சமமாக எண்ணப்படுவார்களானால், இன்று திருச்சபையில் எத்தனையோ பிரச்சினைகள் எழாதிருக்குமல்லவா? 'தோற்றத்தின்படி தீர்ப்புச்

செய்யாமல் நீதியின்படி தீர்ப்புச் செய்யுங்கள் என்கிறார் இயேசு (யோ. 7 : 24). நியாயத்திலே முகதாட்சணியம் பாராமல் பெரியவனுக்குச் செவிகொடுப்பது போல சிறியவனுக்கும் செவிகொடுங்கள். மனிதனின் முகத்திற்குப் பயப்படவேண்டாம்; நியாயத்தீர்ப்பு கடவுளுடையது (உபா. 1:17).

**மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்** (1 பே. 5 : 5): 'உங்களிடத்திலுள்ள கடவுளின் மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாயல்ல, மனப்பூர்வமாய் ; கேடான இலாபத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்; சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள்' (1 பே. 5 : 2,3). தாழ்மை என்பது வாயினால் சொல்லிக்காட்டுவதல்ல. அது மாயமான தாழ்மையாகும் மனத்தாழ்மை என்பது தனக்கே தெரியாத வகையில் நமது சுபாவத்தோடு கலக்கக்கூடிய ஒன்று கிறிஸ்தவத் தலைவர்கள் ஆளோட்டிகளல்ல, மந்தையோடு நடக்கவேண்டியவர்கள், பட்டங்கள், பதவிகள் இவைகளை வைத்துப் பெருமைகொள்ளும் கிறிஸ்தவத் தலைவன் திருச்சபையை நாற்றமெடுக்கச் செய்யும் செத்த ஈ ஆவான்.

**பேச்சுக்கேற்ற செய்கையுடையவர்களாயிருங்கள் :** வேதபாரகரும் பரிசேயரும் சொல்லியும் செய்யாதிருந்த மாய் மாலத்தை இயேசு வன்மையாகக் கண்டித்தார் (மத். 23:3). 'அவர் எதைப் பேசினாரோ அதைச் செய்தார்; அவர் எதைச் செய்தாரோ அதைப் பேசினார்' என்று மகாத்மா காந்தியைப் பற்றிக் கூறப்படுவதுண்டு. நடைமுறைக்கு ஒவ்வாத செயல்களைப் பெருமையாகச் சொல்லி பிரசங்க பீடத்தில் நின்று கொண்டு நேரத்தை வீணாக்குகின்றவர்கள் ஆகாயத்தில் சிலம்பம் வீசுகிறார்கள். நமது பிரசங்க பீடம் நமது வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் நடமாடும் ஒன்றாக இருக்குமானால் நாமும் ஆற்றலுள்ள அருளுரைஞர்கள் ஆகக் கூடுமே !

**கடின உழைப்பாளிகளாயிருங்கள் :** சோம்பேறித் தலைவர்களும் கோழை பக்தர்களும் திருச்சபைக்குப் பெருத்த நஷ்டம் ஆவர். மூன்று வருட காலம், தான் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக்கொண்டு வந்ததை நினைத்து விழித்திருக்கும்படி பவுல் எபேசு சபையின் மூப்பர்களை வேண்டுகிறார். (அப். 20 : 31). நல்ல தலைவனின் படுக்கைகூட திட்டமிடும் பணிக்களமாக அமையும். மக்களைப்பற்றிய இதய பாரத்தைத் தூக்கம்கூட அழிக்க முடியாது. இந்தக் கடின உழைப்பை முறுமுறுப்போடு அல்ல, அன்போடும், புன்முறுவலோடும் செய்ய அழைக்கப்படுகிறோம்,

**தருணத்தைத் தப்பவிடாதிருங்கள் :** 'நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்' (எபே. 5;16). நமது வாழ்வில் மிக நல்ல சமயம் என ஒரு பருவம் இருக்கும். அந்த

உயர்ந்து காலத்தை நன்ருகப் பயன்படுத்த வேண்டும். நல்ல நல்ல காலங்களை விளையாடித் தொலைத்துவிட்டு சாகப்போகும் காலத்தில் 'இயேசுவை ஏற்றுக்கொண்டேன்' என்று கூறப்படும் சாட்சி நமக்கு ரொம்ப மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை. வாய்ப்புக்களை நழுவவிடாமல் அதிக விழிப்புள்ளவர்களாயிருப்போம்.

**கண்ட, கேட்ட, உரையாடின எல்லாவற்றையும் விளம்பரம் செய்யாதிருங்கள் :** அநீதி நிறைந்ததும், அக்கினியுமான நாவு நமது முழு உடலையும் கறைபடுத்தி. ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடாதபடி எச்சரிக்கையாய் இருக்கவேண்டுமாம் (யாக். 3:6). யார் என்ன சொன்னாலும் அதை இன்னொரு இடத்தில் அப்படியே கொட்டிவிடும் ஓட்டை வாயர்களான போதகர்கள் உருவாக்கும் பிரச்சினைகளுக்கு அளவே இல்லை. நமது ஒரு கண் குருடாகவும், ஒரு காது செவிடாகவுமிருந்தால், தேவையற்றகாரியங்களுக்குநேராக அவைகளைத் திருப்பிக்கொள்ளலாம்.

இன்னும் எத்தனையோ பவளங்களை இந்த மாலையில் சேர்க்கலாம்! ஆனால் ஏழுக்கும் குறைவாக இருந்தால் அது குறைவுபட்ட ஒன்ருகும். அநேக தலைவர்கள் இன்று அணிந்திருக்கும் மாலைகளில் இந்த ஏழு பிரமாணப் பவளங்களும் இல்லை. இடையிடையே கோர்க்கப்பட்டிருக்கும் கரித் துண்டுகள், தலைவர்களின் அழகை உருக்குலைக்கின்றன அல்லவா ? பிறருடைய கழுத்துக்களைப் பார்த்துக் காலத்தைக் கழிக்க வேண்டாம் இன்று எனக்கும் உனக்கும் இந்த மாலை முழுமையுடன் காணப்படுகிறதா என்று சிந்திப்போம்.

'உங்களில் எவனாவது தலைவனாக இருக்க விரும்பினால் அவன் உங்களுக்குப் பணியாளாக இருக்கட்டும்.' (மா. 10 : 43)

---

## வாய்வீச்சு வேண்டாம். தேவ சித்தத்துக்கு ஒப்புக் கொடு; வாழ்வு நம் கையில் இல்லை.

நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்துக்குப் போய், அங்கே ஒரு வருஷம் தங்கி வியாபாரம் செய்து சம்பாத்தியம் பண்ணுவோம் என்கிறவர்களே கேளுங்கள்,

நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலம் தோன்றிப் பின்பு தோன்ருமற் போகிற புகையைப் போலிருக்கிறதே.

ஆதலால் ஆண்டவருக்குச் சித்தமானால் நாங்களும் உயிரோடிருந்தால் இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும் யாக் 4:13-15.

# மூல மொழியாக எபிரேயு மொழியில் பழைய ஏற்பாடு

பழை ஏற்பாட்டின் மூல மொழியாகிய எபிரேயு மொழியில் (1) நியாயப் பிரமாணம் (Torah) (2) தீர்க்க தரிசனங்களின் ஆகமங்கள் (Nebhim) (3) சங்கீதங்கள் (Kethubhim) என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. அதை லூக்கா 24 : 44 ஆமோதிக்கிறது. இம் மூன்றிலும் சேர்ந்து இப்பொழுது இருப்பது போல் முப்பத்தி ஒன்பது புத்தகங்கள் கிடையாது. இருபத்தி நான்கு நூல்கள் தான் இருக்கின்றன.

நியாயப் பிரமாணம் ஐந்து : 1. ஆதியாகமம் 2. யாத்திராகமம் 3. லேவியராகமம் 4. எண்ணாகமம் 5. உபாகமம்.

தீர்க்க தரிசன ஆகமங்கள் எட்டு ! முந்தினவைகள் நான்கு 1. யோசுவா 2. நியாயாதிபதிகள் 3. சாமுவேல் 4. ராஜாக்கள். பிந்தினவைகள் நான்கு. 1. ஏசாயா 2. எரேமியா 3. எசேக்கியேல் 4. பனிரெண்டு தீர்க்க தரிசனங்கள்.

சங்கீதங்கள் பதினொன்று : 1. சங்கீதங்கள் 2. நீதிமொழிகள் 3. யோபு 4. உன்னதப்பாட்டு 5. ரூத் 6. புலம்பல் 7. பிரசங்கி 8. எஸ்தர் 9. தானியேல் 10 எஸ்ரு & நெகேமியா 11. நாளாகமம்

பின்னர் பழைய ஏற்பாட்டு வரலாற்று ஆசிரியர் ஜோசப்பஸ் (Josephus) எபிரேயு மொழியில் உள்ள எழுத்துக்கள் இருபத்திரண்டு. ஆகவே பழைய ஏற்பாட்டு நூல்களும் இருபத்திரண்டாயிருப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதி ரூத் என்னும் நூலை நியாயாதிபதியோடும் புலம்பல் என்னும் நூலை எரேமியாவோடும் இணைத்துப் பழைய ஏற்பாட்டு எண்ணிக்கையை இருபத்திரண்டாகக் குறைத்து விட்டார்.

பின்னர் கி. மு. 250–இல் மூலமொழியாகிய எபிரேயுவிலிருந்து கிரேக்க மொழிக்கு மொழியாக்கம் செய்த அறிஞர்கள் பொருள் வாரியாக நூல்களைப் பிரித்து தற்போதுள்ள மாதிரி முப்பத்தி ஒன்பதாகத் தொகுத்து வெளியிட்டனர். பின்னர் அந்த ஒழுங்கை இலத்தீன், ஆங்கிலம் தமிழ் போன்ற மொழியினரும் ஏற்றுக்கொண்டு பின்பற்றி வருகின்றனர்.

Dear Readers,

அன்புள்ள திருமறை ஆசான் வாசகர்களே !

Please help us to serve you better by answering the questionnaire attached.

தயவு செய்து இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்குப் பதிலளித்து பத்திரிகையின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் உதவுங்கள்.

1) Name & Address.

1) உங்கள் பெயரும், விலாசமும்.

2) What is your religion and sub-division if any?

2) எம்மதத்தினர் (உட்பிரிவு எது என்று குறிப்பிடவும்)

3) Are you receiving the 'Thirumarai Aasaan'?

3) நீங்கள் திருமறை ஆசான் பெறுகிறீர்களா ?

4) If yes, what is your opinion about its size and structure?

4) அதன் வடிவமைப்புகளைப் பற்றி, உங்கள் கருத்தென்ன ?

a) Do you suggest any modification ?

a) ஏதாவது மாற்றம் தேவையா ?

b) Kindly give your suggestions for the improvement,

b) மேம்பாட்டுக்குரிய ஆலோசனைகள் இருந்தால் குறிப்பிடவும்.

5) What do you think about the articles that appear in the magazine?

5) அது தாங்கி வரும் கட்டுரைகளைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

a) Is there any item to be added?

a) என்த எதைச் சேர்க்கலாம்?

b) What item may be omitted?

b) ஏதை எதைத் தவிர்க்கலாம் ?

c) What are other items that may, according to you, be more useful to the readers?

c) இன்னும் எம்மாதிரிக் கட்டுரைகள் வெளிவருவது அதிக பயன் தரும் என்று கருதுகிறீர்கள்?

d) What do you think about the language style?

d) தமிழ்நடையைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

6) Do you receive the English Bible Teacher?

6) நீங்கள் ஆங்கிலத்தில், வரும் பைபிள் டீச்சர் படிக்கிறீர்களா?

a) What is your opinion about the Tamil translations of it?

a) படித்தால் இதில் வரும் மொழியாக்கத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயத்தை எழுதவும்.

b) In order to explain the subject, the translators seem to use some illustrations and explanations, Does it strengthen or weaken the original thought of the article?

b) சில இடங்களில் கருத்துக்களை விளங்க வைப்பதற்காக தமிழில் மொழி பெயர்ப்பவர்கள் சிறிது விரித்தும் எடுத்துக் காட்டுகள் கொடுப்பதும் மூலக் கட்டுரையின் கருத்தை மேலும் வலுப்படுத்துகிறதா? (அல்லது) பலவீனப்படுத்துகிறதா?

7) Any other remarks.

7) வேறு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?

Signature.

கையெழுத்து.

P. S. Those who know English, may answer in English.

தயவு செய்து டீ கேள்விகளுக்கு பதில் எழுதி 15-9-88க்குள் நிர்வாக ஆசிரியருடைய விலாசத்துக்கு தபாலில் அனுப்பித் தரும்படி பணிவாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH**—The Voice of Truth—Speakers: Reggle Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9 : 00 to 9 : 15 P. M.
Fridays-7 : 45 to 8 : 00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker : Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9 : 00 to 9 : 15 P. M.
Thursdays-9 : 00 to : 9 : 15 P. M.
Fridays-9 : 00 to 9 : 15 P. M.
Sundays-12 : 45 to 1 : 00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker: Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2 : 30 to 2 : 45 P. M.
Tuesdays-2 : 30 to 2 ; 45 P. M.
Thursdays–2 : 30 to 2 : 45 P. M.
Fridays-2 : 30 to 2 : 45 P. M.
Saturdays-2 : 30 to 2 : 45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker : P. R. Swamy.
All correspondence should be sent to Tne Way of Truth, Post Box 8405, Bangalore-550084.
Tuesdays-5 : 30 to 5 : 45 P. M.
Thursdays-6 : 45 to 7 : 00 P M.
Sundays-6 : 45 to 7 : 00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker : P. K. Varghese
All corespondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala.)
Tuesdoys,3 : 45 to 4 : 00 P. M.
Fridays-3 : 45 to 4 : 00 P. M.

ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondcnce Courses and Christian Literature are available in these different languages from tne addresses listed. Also the radio sermons are avaiiable in book form.

---

இந்த இதழ் தனிச் சுற்றுக்கு மட்டும்.

## வாசக அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு!

உங்களுக்கோ அல்லது நீங்கள் முகவரி கொடுத்த யாருக்காவதோ இதழ்கள் வந்து சேரா விட்டாலும் ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்து கொண்டிருந்தாலும் தயவு செய்து எங்களுக்கு எழுதுங்கள்.

ஒவ்வொரு மாதம் 20-ம் நாள் அன்று இதழ் வெளி வருகிறது. 25-ம் நாளுக்குள் இதழ்கள் வந்து சேரா விட்டால் எங்களுக்கு ஒரு அஞ்சல் அட்டை மூலம் தெரிவியுங்கள். நன்றி!

ஆசிரியர்

Edited and Published by E. Z. Selvanayagam and Printed by
Sri. Vela E. V. Arasamanickam, at Vela Printers, Erode-638 001.
Phone : 74878

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to :
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002.